## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No. 53/2025 |
| Prosecution Witness | : | **அ.சா.**1 |
| Name | : | **பழனிச்சாமி** |
| Father's / Husband Name | : | **ரெங்கன்** |
| Address | : | **ஆலம்பாடி ரோடு, சமத்துவபுரம், பெரம்பலூர்.** |
| Age | : | 43/2025 |

**<u>தேதி : 04.06.2025</u>**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு.S. தினேஷ் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

**<u>முதல் விசாரணை</u>**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் 10ம் வகுப்பு படித்துள்ளேன். ஆஜர் எதிரியை தெரியாது. மற்றொரு எதிரி டால்டா கண்ணன் என்பவரையும் தெரியாது. சாட்சி சுரேஷ் என் நண்பர். என்னிடம் யாரும் கத்தியை காட்டி மிரட்டி செல்போன் மற்றும் பணம் ஆகியவற்றை பறித்து செல்லவில்லை. என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த புகார் மனுவில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது. போலீஸார் என்னை விசாரிக்கவில்லை. **புகார்மனுவில் உள்ள சாட்சியின் கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்க கோரி அரசு தரப்பு வைத்த கோரிக்கையை ஏற்று சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவித்து அரசு தரப்பு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

போலீஸார் தன்னை விசாரித்தாகவும், போலீஸார் விசாரணையில் கடந்த 26.08.2024 அன்று இரவு 7.30 மணி அளவில் தன்னுடைய வீட்டின் அருகே குடியிருக்கும் சாட்சி சுரேஷ் என்பவர் அங்காயி கோவிலுக்கு செல்லும் வழியில் நின்றுக்கொண்டிருந்ததாகவும், அவரிடம் இவ்வழக்கின் எதிரிகள் பேசிக்கொண்டிருந்ததாகவும், அவர்கள் தான் நடந்து வருவதை பார்த்து இருசக்கர வாகனத்திற்கு பின்னால் இருந்த 1வது எதிரி இடுப்பில் மறைத்து வைத்திருந்த கத்தியை காட்டி அச்சுறுத்தி மிரட்டி மேல்பாக்கெட்டில் வைத்திருந்த சாம்சங் ஏ2 செல்போன் மற்றும் பணம் ரூ.1000/- பறித்துக்கொண்டதாகவும், இரண்டாவது எதிரியுடன் இருசக்கர வாகனத்தில் தப்பிச்சென்றதாகவும், பின்னர் இது சம்மந்தமாக பெரம்பலூர் காவல் நிலையத்தில் புகார் மனு அளித்தாகவும் கூறிவிட்டு தற்போது எதிரிகள் தன்னுடைய நண்பர் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக உண்மையை மறைத்து சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1
Perambalur.